38

உ

சிவமயம்.

இந்துகுடும்ப

# பாலிகாபூஷணம்.



அ. இரங்கசாமிமுதலியார் & சன்ஸ்

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

திப்பிக்கப்பட்டது.

1927.

சாயப்பிள்ளை வீதி.

O-, IMMV7, I
N29
183535

உ

கடவுள் துணை.

மல்லிகார்ச்சுனபுரம்

மாணிக்கவல்லியம்மாளியற்றிய

இந்துகுடும்ப

# பாலிகாபூஷணம்



அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சியந்திரசாலை

சென்னை.

இதன் விலை] 1929 [அணா-2

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

3- JUL 1929

கடவுள் துணை.

# இந்துகுடும்ப பாலிகாபூஷணம்.

## விநாயகர் துதி.

கன்மம்போம் வல்வினைபோம் காசினியி[illegible]க்கும்
துன்பம்போம் போகாத்துயரம்போம்—அம்மையுடன்
தில்லைநட னம்புரியும் தேவன் மகிழ்ந்தளித்த
வல்லபை யானைத் தொழுப வர்க்கு.

## சரஸ்வதி துதி.

பொன்னே கலைபயில் பூங்குயிலேபுவிமூன்றினுக்கு
மன்னேயென துயிர்க்கோர் துணையேயருங்கல்வியுட
னின்னேயமுநற்பொருளுந் தருகுவைநின்மலியே
வன்னேருயர்வருவெண் டாமரையிற் சரஸ்வதியே.

இப்படி பாலிகைகள் பிள்ளையாரையும் சரஸ்வதி தேவியையும் கும்பிட்டுக்கொண்டு பாடசாலைக்குப் போனால் பாடங்களைச் செவ்வையாய் உபாத்தியாய ரிடத்தில் ஒப்புவித்து அடிபடாமல் இருப்பார்கள்.

## தொடை தொட்டு விளையாடல்.

ஒருபுட்டம் திருபுட்டம் ஓடிவா மங்களம் பருப் பாஞ்சோறும் பன்னிரண்டுவகையாம் செக்கைத்திரு ப்பி செவ்வெண்ணெய் வார்த்து மாடுங்கன்றும் வரும்போது மஞ்சாத்தண்ணீர் குளிக்கும்போது காலை மடக்கடி காமாட்சி.

## மார்பில் தட்டிக்கொண்டு ஓடி விளையாடல்.

முன்னேபோனமீனாட்சி சின்னவீட்டிற்கு விளக் கேற்றினையா? கையில் குழந்தையிருக்கின்றது.

குழந்தையைக் கீழேவிட்டு விட்டு ஒருகைகூழைக் குடித்துவிட்டு வாயில் பச்சரிசி போட்டுக்கொண்டு மார்பில் தட்டிக்கொண்டுவா.

என்னகுளத்தில் மூழுகினே. பீக்குளத்தில் மூழுகினேன். எங்கள்வீடெல்லாம் பீயாய்விட்டது ஓடுஓடு.

பாலிகைகள் உல்லாச வழிநடைவார்த்தைகள்.

நீ எங்கேபோனுய் ஊருக்குப்போனேன், என்னவூர் மைலாப்பூர், என்னமயில் காட்டுமயில், என்னகாடு ஆறுகாடு, என்னஆறு பாலாறு, என்னப்பால் கள்ளிப்பால், என்னகள்ளி இலைக்கள்ளி, என்னயிலை வாழையிலை, என்னவாழைகற்பூரவாழை, என்னகற்பூரம் ரசகற்பூரம், என்னரசம் மிளகுரசம், என்ன மிளகு வால்மிளகு, என்னவால் நாய்வால், என்ன நாய் மரநாய், என்னமரம் பலாமரம், என்னபலா வேர்பலா, என்னவேர் வெட்டிவேர், என்னவெட்டு பனைவெட்டு என்னபனை தாளிப்பனை, என்னதாளி விருந்தாளி, என்னவிருந்து மணவிருந்து, என்ன மணம் பூமணம், என்னபூ மாம்பூ, என்னமா அம்மா.

கண்களை மூடியாடும் பாடல்.

உங்களம்மாள் என்னென்னபோட்டாள் பாலுஞ் சோறும்போட்டாள், ஈவிழுந்ததா எறும்புவிழுந்ததா எறும்புவிழுந்தது, எடுத்துவிட்டுக் குடித்தையா சும்மாகுடித்தையா, சும்மாகுடித்தேன் உனக்கொரு காயும் எனக்கொருபழமும் தேடிக்கொண்டுவா.

காயேவா பழமேவா காஞ்சிபுரத்து நெல்லேவா.

நான்குமூலைகளிலும்நின்று சுற்றி விளையாடல்.

காயே கடப்பங்காய் காஞ்சிபுரத்து நெல்லிக்காய் உப்பே ஊர்காய் ஊரப்போட்ட நெல்லிக்காய்.

கட்டிய கையை வாங்கும் பாடல்.

இவ்வளவுவேண்டுமா பாவற்காய் அதுவும்வேண்டாம் பீர்க்கங்காய், இவ்வளவு வேண்டுமா பீர்க்கங்காய் அதுவும்வேண்டாம் கத்திரிக்காய், இவ்வளவு

வேண்டுமா கத்திரிக்காய் அதுவும் வேண்டாம் வாழைக்காய், இவ்வளவு வேண்டுமா வாழைக்காய் அதுவும் வேண்டாம் முருங்கைக்காய்.

## ஏழாங்காயாடும் பாடல்.

1. காய் ஆலப்பொருக்கி ஆசாரக்கள்ளி தூக்கந் தெளிந்த தூராடைக்காரி பாக்குமரத்துக்கு பாவாடைக்காரி.

2. காய், வீறியிரண்டெடுக்க வீசன் தண்டெடுக்க மாதா மண்ணெடுக்க.

3. காய், முக்கோட்டுராவணன் முத்துச்சரவணன்.

4. காய், நான்குநடந்துவர நாகேந்திரன் தொடர்ந்துவர.

5. காய், ஐவர் அரைக்குமஞ்சள் தேவர்குளிக்குந் தண்ணீர்.

6. காய், ஆக்கோரடிவாழை அண்ணன் தம்பி பெருவாழை.

7. காய், ஏழண்ணன் காட்டிலே எங்களண்ணன் வீட்டிலே மஞ்சள்சரட்டிலே.

பொதைபொம்பரம் செட்டி சிதம்பரம் கொக்கு கோலாட்டம்.

## மழை வரவழைக்கும் பாடல்.

கொட்டைப்பாக்கு நறுக்கித்தாரேன் கோயில் மண்ணைத்தெள்ளித்தாரேன் ஜோர்மழைவா ஜோர் மழைவா ஜோர்மழைவா.

## ஆடையுடுத்தல்.

மஜிலின்பாவாடைக் கட்டிக்கொண்டு மத்தாப்பு ரவிக்கை போட்டுக்கொண்டு காடிவண்டியி லேறிக் கொண்டு கன்செட்டுவாத்தியம் வைத்துக்கொண்டு வாங்களம்மா சம்மந்தி போங்களம்மா சம்மந்தி.

## சோளமடிக்கும் கும்மி.

சோளாச்சோளக்காட்டிலே சோளமடிக்கிற வீட்டிலே, பந்தடியேமீனுளே பதக்குசோளம் நான் தாரேன், சின்னுச்சின்ன மூக்குத்தி சின்னப்பனிட்ட மூக்குத்தி, அத்தையிட்ட மூக்குத்தி அரைப்பணத்து மூக்குத்தி, கண்டெடுத்த மூக்குத்தி காப்பணத்து மூக்குத்தி.

## புஷ்பச்செண்டு விளையாடல்.

தங்கசரமாலே சண்பகப்பூமாலே ஆண்டிதோட்டந் தன்னிலே ஆய்ந்தமல்லி மாலே.

## தாய்தந்தை வளர்த்த அருமைப்பாடல்.

மயிலேகுயிலே எங்களம்மாள் மயிலேப்போலே யென்னைப்பெற்ருள் சீமைத்துரை யெங்களப்பன் சிமிழைப்போலே யென்னை வளர்த்தான்.

## அம்மானையாடும் கும்மி.

எப்பு இல்லாப்பூ எங்களண்ணிக்குத் தாழம்பூ ஊராரண்ணிக்கு ஊத்தாம்பூ.

## நெல்லுகுத்தும்பாடல்.

நெல்லுகுத்துடி பெண்ணே சும்மாய் பார்க்கிறு யென்னே புருஷன் வாரான் பின்னே புடைத்துப் போடடி கண்ணே ஆ ஹாங் உ ஊங்.

## நிலாச்சோறு சமைத்தல்.

அரிசியைக்குத்துமுன்னே யரித்துக்கழுவுபின்னே
உலேயிலரிசிபோடு உடனேமேலேமூடு
கொதித்துவெந்தபின் வடித்துகொட்டி ஆற்றிநின்று
கத்தரிக்காயையரிந்து காரம்புளிப்புதெரிந்து
உப்புமசாலும்போட்டு ஒத்திருக்கக்கூட்டு
வெந்தபின்னே தாளித்து விரித்தயிலேயிலமைத்து
யாவருங்கூடிப்புசிப்போம் இன்பமாகவசிப்போம்.

## மாவளிசுற்றல்.

மாவளியோமாவளி மாவளிக்காரன் பெண்டாட்டி
மரக்கால்பிள்ளை பெற்றாளாம்
எடுக்கவந்தசீமாட்டி இடுப்பொடிந்துசெத்தாளாம்
பார்க்கவந்தசீமாட்டி பல்லொடிந்துசெத்தாளாம்
தூக்கவந்தசீமாட்டி தோளொடிந்துசெத்தாளாம்
சும்மாவந்தசீமாட்டி சுருண்டுவிழுந்துசெத்தாளாம்.

## சிற்றுண்டி விற்றல்.

காசாலட்டு கைமேலே துட்டு போனால் வராது பொழுதுபோனால் நிற்காது.

## சிற்றுண்டி யுண்ணல்.

மண்ணடியில்விற்கும் லட்டு வாங்கிமடியில் கட்டு எடுத்துக்கொஞ்சம்பிட்டு எனக்கே முன்னேயிட்டு உண்டுவிடு ஏப்பம்-ஓடுகொஞ்சம் பார்ப்போம்.

## தோட்ட விளையாடல்.

புங்கம்இலை புளியம்இலை யெங்கிருக்குது பொன்னப்பன்தோட்டத்தில் மிகுந்திருக்குது அப்பா வாரேன் அவ்விடத்தில் பூச்சியிருக்குது பூச்சிக்கு என் கையில்மருந்திருக்குது கட்டாரிசேலையின்மேல்கண்ணிருக்குதுமாமனுக்கெனக்குமொரு வம்பிருக்குது;

## மாமனை யேசல்.

மாமாடா மாமா மாமரஞ்சோலை நீவரும்வேளை நீலக்கண்ணாடி சந்தனப்பொட்டு சரிகைத் தலைப்பாகை மல்வல்லவாட்டு மகிழ்லாங்குகோட்டு சாய தோவத்தியடா மாமா சரியில்லை புத்தியடா.

## மாமனுக்குப் புத்திகூறல்.

மாமா மாமா பன்னாடே மாமியார் வீட்டுக்குப் போகாதே சுக்கங்காயைத் தின்னாதே சூத்தையறுத்

தூக்கினு சாகாதே நாணயமெத்தப் பேசாதே நாக்கையறுத்துச் சாகாதே.

## அத்தானை ஏசல்.

அத்தானே அத்தானே வாருங்கள் அமரிக்கையாயுட்காருங்கள் ஆறுபணந் தாருங்கள் அக்காளழகைப் பாருங்கள் உங்கள்கண்ணே பூனைக்கண் உசந்தமூக்கோ கிளிமூக்கு பேசும்நாக்கோ பிண்ணாக்கு பெருத்தவாயோ வொருகால்வாய் நல்லவயிறோவண்ணான்சால் நடக்குங்காலோ ஏணிக்கால் இந்தழகுக்கொருவாயேன் இடத்தைவிட்டு எழுந்துப்போயேன்

## அத்தானுக்கு அறிவுறுத்தல்.

அத்தான்வந்தானே என்னசொன்னானே ஆற்றிலிருக்கிற பாவக்காயை அறுக்கச்சொன்னானே இலையைப்போட்டு சோறுவைத்தால் திப்பியென்றானே அடையைச்சுட்டு கையில்கொடுத்தால் வரட்டியென்றானே பிள்ளையைப்பெற்று கையில்கொடுத்தால் பொம்மையென்றானே.

## அத்தைமகனை ஏசல்.

பூபூ புளியம்பூ பொன்னத்தான்கொண்டைக்குத் தாழம்பூ, அத்தைமகன் வாசலிலே அதோநிற்கிறான் பாருங்கள், மீசையின்முருக்கைப்பார்மேலேசரிகைக் குட்டையைப்பார், சொக்காயின் சொகுசைப்பார் தோவத்தியின்மினுக்கைப்பார், கையில்குட்டையின் ஒழுங்கைப்பார்கடியாரத்தின்கொலுசைப்பார், இங்கேவந்தகாரியம் என்னவென்று கேளுங்கள். (பூபூ)

## மாமனையும் அத்தானையும் சந்தோஷப்படுத்தல்.

சின்னசின்ன செடிகுலுங்க சித்திரமணி ரதங்குலுங்க, வன்னிமரங்குலுங்க வந்திடுங்கள் என்பிறகே,

மந்தையிலேமாடிருக்க மந்திரப்பெண்கள் நாமிருக்க
கொண்டையிலேபூவிருக்க குற்றமென்னராஜாவே.

பாலிகைகளுக்கும் அத்தானுக்கும் சம்வாதம்.

அத்தான்சித்திரக்கொள்ளி உனக்கெத்தனை பிள்ளை
பாலிகைசாமிகொடுத்த சப்பாணிப்பிள்ளை.

சின்னிப்பாடல்.

பச்சைக்கிளியோடி சின்னி பவழக்கொடியோடி
சின்னி என்னைத் தொடாதடி சின்னி என்பாவங்
கொள்ளாதடி சின்னி ஆலமரத்தடியே சின்னி ஆறு
மாதம்காத்தேனடி சின்னி இலுவமரத்தடியேசின்னி
எட்டுமாதம் பார்த்தேனடி சின்னி என்முகம்பாரா
யோடிசின்னிஎனைமோசம்செய்யாதடிசின்னிகட்டிக்
கரும்போடிசின்னி கண்ணின்மணியோடி சின்னி.

பூபிகள் ஒருபொம்மைக்குச் சின்னியென்று பேரி
ட்டு அதைக்கையில் வைத்துக்கொண்டு இந்தப்பாட்
டைப்பாடி விநோதமாய் ஆட்டுதல்.

கிளிப்பாடல் ஜாவளி.

அரசமரத்துக்கிளி ஆசாரம்பேசுங்கிளி
பாலன்வடிவேலன்கிளி பாடுதுபார்பாடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. க

புன்னைமரத்துக்கிளி புதுமைமெத்தபேசுங்கிளி
மாணிக்கம்வளர்த்தகிளி பண்பாகஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. உ

பாக்குமரத்துக்கிளி பதங்கள்மெத்தப்பாடுங்கிளி
மரகதம்வளாத்தகிளி மகிழ்வாக ஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. ந

நந்தவனத்துக்கிளி நாகரீகம் பேசுங்கிளி
நடராஜன்வளர்த்தகிளி நலமுடனேபாடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. ச

பூங்காவனத்துக்கிளி புலவர்போல்பேசுங்கிளி
பாங்காய்வளர்த்தகிளி பாடுதுபாராடுதுபார்.
எல்லோரும் பாருங்களே பாருங்களே. ரு

பெண்கள் 5-வயதுமுதல் 10-வயதுவரையிற் இரவில்நிலாச்சோறுசமைத்தல்முதலிய விளையாடல்கள்

இஷ்டசித்திப் பிள்ளையார்.

உத்தராயண தநுர்மாதத்தில் பாலிகைகள் யாவரும் ஒன்றுகூடி பிள்ளையாரை ஸ்தாபிதஞ்செய்து சூழ்ந்துவந்து கும்மியடித்தல். சு

தநுர்மாதத்துக் கும்மி

பிள்ளையார் பிள்ளையார் அவரெங்கெங்கே பிள்ளையார், கத்திரித்தோட்டத்திலே களைகொத்துறார்பிள்ளையார், அங்கேயும்போய்பார்த்தேன் அவரெங்கேயோபிள்ளையார், பார்ப்பாரத்தெருவிலேபந்தாடுறார் பிள்ளையார், அங்கேயும் போய்பார்த்தேன் அவர் எங்கையேபிள்ளையார், செட்டித்தெருவிலே செண்டாடுகிறார்பிள்ளையார், அங்கேயும்போய்பார்த்தேன் அவரெங்கையேபிள்ளையார், வேளாளத்தெருவிலே விளையாடுகிறார் பிள்ளையார், அங்கேயும்போய்பார்த்தேன் அவரெங்கையோ பிள்ளையார், கோமுட்டித்தெருவிலே கொண்டாடுகிறார் பிள்ளையார், அங்கேயும்போய்பார்த்தேன் அவரெங்கையேபிள்ளையார், வாணியத்தெருவிலே வாதாடுகிறார்பிள்ளையார், அங்கேயும் போய்பார்த்தேன் அவரெங்கையேபிள்ளையார், பிள்ளையார்கூடம் பிரிந்துகிடக்குதே, எத்தாலேகட்டலாம் இனி ஏதாலேகட்டலாம.

தட்டாலேகட்டினால் தூசுகள்படருமே
பணத்தாலேகட்டினல் பாசைகள்சேருமே
எத்தாலேகட்டலாம் இனி ஏதாலேகட்டலாம்.

ஒருகட்டுமூங்கில்பிளந்து மண்டபங்கட்டி, மண்டபத்துக்குமண்ணாரஞ்சிமாளிகைக்குப்பொன்னாரஞ்சி
எத்தாலேகட்டலாம் இனி ஏதாலேகட்டலாம்.

சுத்துகட்டும்பொன்னாலே சூரியவாசலும் பொன்னாலே, அரகட்டும்பொன்னாலேஅரண்மனைவாசலும் பொன்னாலே.

## குதித்தடிக்கும் கும்மி.

### பல்லவி.

கும்மியடிப்பெண்கள் கும்மியடி—உடல்
குலுங்கக்குலுங்கக் கும்மியடி.

### அநுபல்லவி.

செம்மையுற்நாளும் நித்தியகல்யாணனைச்
சேர்ந்துகும்மி யடியுங்கடி.

### சரணங்கள்.

வானவர்போற்றுங்குணாளனடி—மலர்
வள்ளிமகிழுமணாளனடி
தானவர்தங்குலகாலனடி—உயர்
தங்கமடிதேவசிங்கமடி. ௧

பிறவிப்பிணியைத் தீர்த்திடுவான்—மறை
பேசவுநற்பதஞ்சேர்த்திடுவான்
அறிவுவழிநிலையாக்கிடுவான்—பேர்
அன்புக்கிரங்கிக்கண்ணோக்கிடுவான். ௨

விண்ணோர்க்கமுதீந்ததூயனடி—உயிர்
வேதாகமந்துதிநேயனடி
எண்ணுமன்பரனுகூலனடி—கிரி
எந்துமாமறைமூவனடி. ௩

பங்கனையின்றநித்தனடி—சிவ
பத்தர்பணிந்திடுங்கர்த்தனடி
மங்களமார்ந்தொளிரத்தனடி—மூத
மாயனசோதைகள்சேயனடி. ௪

## விளையாடல்கள்.

பொம்மைக்குக்கலியாணம் செய்யவேவேண்டும்
கம்மல்ஜிமிக்கை கைக்குப்பொன்பாட்டில்

செம்மைப்பட்டாடைச் சிவப்புச்சிற்றுடை
அம்மணிவாங்கி யருளடியெனக்கே.

## பெண்கொள்ளல்.

சின்னசின்னஎந்திரமாம்திருவள்ளூர்கோபுரமாம், எங்களுட அத்தைமகன் என்னைகொள்ளமாட்டே னென்றான்மங்கையில்மாடிருக்கமதுரைபெண்கள்நா மிருக்க, கொண்டையிலே பூவிருக்க குற்றமென்ன ராஜாவே, ஏபெண்ணே வைங்கப்பூவே அப்பனெ ங்கே போனாண்டி, வெள்ளிமலையோரம் வெற்றிலே யாங்கொடிபிடுங்க, உண்ணவாமருமகனே புண்ணது போதுமத்தே, பெண்ணையனுப்பாயோ பெற்றாரே சொல்லுங்கள், எண்ணையில்லைசீப்புயில்லைஇளந்தேங் காய் மஞ்சளில்லை, வாரிமுடித்துக்கொண்டு வந்திரு ப்பாள் சந்தினிலே, சந்தையிலேமதிப்பாள் சந்தனத் தைத் தோற்கடிப்பாள், பூவையிலேமதிப்பாள் பூஞ் சரத்தைத் தோற்கடிப்பாள்.

## மாமியார் கலியாணப்பெண்ணை அழைத்தல்.

சீப்புவந்துசிக்கிலிருக்குது வாடிமருமகளே
சீப்புவந்தாலெனக்கென்ன அது
சிக்கிலிருந்தா லெனக்கென்ன

கட்டுகயிர்வந்துகொடியிலிருக்குது வாடிமருமகளே
கட்டுக்கயிர்வந்தா லெனக்கென்ன அது
கொடியிலிருந்தா லெனக்கென்ன

மாலைவந்துமடியிலிருக்குது வாடிமருமகளே
மாலைவந்தாலெனக்கென்ன அது
மடியிலிருந்தா லெனக்கென்ன

கூரைவந்து கொடியிலிருக்குது வாடிமருமகளே
கூரைவந்தாலெனக்கென்ன அது
கொடியிலிருந்தா லெனக்கென்ன

தாலிவந்து தரையிலிருக்குது வாடிமருமகளே
தாலிவந்தா லெனக்கென்ன அது
தரையிலிருந்தா லெனக்கென்ன

பார்ப்பான்வந்துபஞ்சாங்கஞ்சொல்லுகிறுன்வாமடி
பார்ப்பான்வந்தா லெனக்கென்ன அவன் [ருமகளே
பஞ்சாங்கஞ்சொன்னு லெனக்கென்ன
மாப்பிள்ளைவந்து மணைமேலிருக்கிறுன் வாடிமருமக
மாப்பிள்ளைவந்தா லெனக்கென்ன அவன் [ளே
மணைமேலிருந்தா லெனக்கென்ன

மாமியார் கலியாணப்பெண்ணை அலங்காரஞ் செய்ய அழைக்கும்போது கலியாணப்பெண் பிணங்கி இன்னுஞ்சிலர் சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டுபோய் நலங்கிடல்.

பெண்ணுக்கு நலங்கிடல்.

நலங்கிடவாருங்களிப்போ நங்கையரெல்லாம்
நால்வகைவர்க்கஞ்சேர்ந்த நலமானசந்தனத்தை
நாகபூஷணனுக்கும் இலட்சுமிதேவிக்கும் நல

அல்லல்கள்மிகப்புரிந்த அசுரர்கள்சிரமரிந்த
வல்லராமமூர்த்திக்கும் வல்லசீதாதேவிக்கும் நல

பாலுந்தயிரையுமுண்ண பாற்கடல்வெண்ணைகாண
பாலனும்கோபாலனுக்கும் ருக்மணிதேவிக்கும் நல

மணமகனை ஏசி நலங்கிடல்.

கோவைப்பழம்போல எங்கள் பெண்ணழகு-இந்த
கொடுவாமூஞ்சிமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் க

நாகப்பழம்போல எங்கள் பெண்ணழகு-இந்த
நாமூஞ்சிமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் உ

அன்னுசிபழம்போலே எங்கள் பெண்ணழகு-இந்த
அழகுகெட்டமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் ரு

எலுமிச்சம்பழம்போல எங்கள் பெண்ணழகு-இந்த
எரிமூஞ்சிமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் ச

## தம்பதிகளுக்குநலங்கிட்டு மணமாலையிட்ட மறுநாள் ஊஞ்சலிடுதல்.

சீரானபொற்பலகை திகழச்சேர்த்து
செம்பவளக்கால்நான்கு சேரவேநாட்டி
ஏரானவயிரச் சங்கிலியுந்தூக்கி
ஏற்றமரகதக் கொடுங்கையும்பூட்டி
நேரானநவரத்ன பீடமமைத்து
நிகரிலாமுத்துத் தொங்கல்நிறைந்தஊசல்
பேரானஜானகியாள் பிணையாய்க்கூட
பெருமையுறு ஸ்ரீராமராடி ரூசல்

தேவர்முதல்விஞ்சையர்கள் தெளியாழ்வல்லோர்
திரளாகவந்துஜய விஜயமென்ன
பாவில்திருவாய்மொழியைப் பலருங்கூடி
பாவையர்கள்குழவிமனங் களிக்கப்பன்ன
சாலிகலைதுறவர்மனங் கனிந்துபோற்றக்
களங்கமிலா வடியர்குழாங்கந்து
தேவிஜானகியணங்கை சிறப்பாய்க்கூடி
திகழுதச ரதராமராடி ரூசல்

சங்கீதவாத்தியங்கள் தழங்கவேத
சாமகானமுமெய்யர் தழைக்கவோத
இங்கிதமாய்க்கனிகையரும் ஏற்பாய்பாவ
இராகதாளங்களுமே யிசையநாத
மெங்கினும்பேரொலிகேட்க இனிதாயாடி
இன்பமாய்வாலி யெச்சரிக்கைபேச
மங்களமாய்ஜானகியை மணமாய்க்கூடி
மனமகிழும் ஸ்ரீராமராடி ரூசல்

18335

## திருமணமும் மங்கள வாழ்த்தும்.

அத்தைமகள்உத்தமியைக் கொள்ளவேவேண்டும்
அழகானசிறுதாலி கட்டவேவேண்டும்

கடவுளைப்பலநாளுந் தொழவேவேண்டும்
கலிதீரப்பிள்ளையைப் பெறவேவேண்டும் [ம்
குலம்விளங்கக்கிருஷ்ணாவென் றழைக்கவேவேண்டு
குதலைச்சொல்கேட்டுமிக மகிழவேவேண்டும்
வருத்தநோயில்லாமல் வளரவேவேண்டும்
வாழையடிவாழையாய் வாழவேவேண்டும்

என்றுபெரியோர்கள் ஆசீர்வதித்தபின்சிறிதுநாள் மதனும் ரதியும்போல் வாழ்ந்திருந்து ஒருநாள் இருவரும் சந்நிதிக்குச்சென்று கடவுளை வழிபடல்.

ராஜராஜேஸ்வரிதுதி.

அகிலபுவனஞ்சரர் சரமீன்றளித்தாளு
மாதியே பவிற்சோதியே
அமலகலியாணகுண மங்கள சொரூபியே
அன்னமே யொளிர்சொர்னமே
புகலரியதன்கருணை வாரியேசிறியர்கள்
புந்தியுறை சுகுமாரியே
பொருவினற்றாயினுஞ் சாலவன்புடனெனைப்
புவிமிசைக் காத்தருளுவாய்
ககனநீண்டோங்குபல மாடமலியெழின்மிக்க
கச்சியிற் காமாக்ஷியாய்
கனமதுரைதன்னில் மீனாக்ஷியாய்க்காசியிற்
காமரு விசாலாக்ஷியாய்
மகிதலம்போற்றுதிரு வொற்றியூர்தியாகர்தம்
வாமபா கத்தமர்ந்து
வருசுக்ரவாரத்தி லடியவர்க்கருள்செய்யும்
வடிவாம் பிகைச்செல்வியே.

பரமேஸ்வரர் துதி.

அரும்பொனேமணியே யெனன்பேயெனன்பான
வறிவேயென் னறிவிலூறு

மானந்தவெள்ளமே யென்றென்றுபாடினே
னாடினே னுடிநாடி
விரும்பியேகூவினே னுளறினேனலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரியெனவெனிரு கண்மாரிபெய்யவே
வேசற் றயர்ந்தேனியா
னிரும்புநேர்நெஞ்சக் கள்வனைனுமுனை
யிடைவிட் டின்றதுண்டோ
வென்றுநீயன் றுநா னுன்னடிமையல்லவோ
யாதேனு மறியாவெறுந்
துரும்பனேனென்னினுங் கைவிடுதனீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியே சுகவாரியே.

இருவரும் சந்நிதிக்குச்சென்று கடவுளைவழிபட்டு அவரருளைப் பெற்று சுகமாய் இருவரும் வாழ்ந்து மக்களைப்பெற்று மகிழ்ந்திருத்தல்.

இதுபோலவே பெண்கள் தங்கள் குடும்பத்தில் நடக்கவேண்டிய முறைமைகள்.

பாலிகைகள் பணஞ்சேர்க்கும் பாடல்.

ஏலேலோ ஏலேலோ பெண்மயிலே ஏலேலோ ஏலேலோ, குணமிருந்தா லொன்றுமில்லை நல்ல குலமிருந்தா லொன்றுமில்லை, பணமிருந்தா லவர்காலிற் பணிவார்கள் ஜகத்திலுள்ளோர், ஏலேலோ ஏலேலோ பெண்மயிலே ஏலேலோ ஏலேலோ.

ஜரூர்.

பணமிருந்தாலதுபத்துவகைசெய்யும் - பணமிலாதவருலகிற் பிணமாகையாலே-பாடுபட்டுப்பணந்தேடவேவேண்டும்-பாங்காய்மதிக்கவுடலெடுக்கவேவே

ண்டும்-ஒருகாசுடன்வேறு ஒருகாசுதேடும்-உபாயத்திலேயென்றும் ஊக்கம்வரவேண்டும்-காசுகளைக் காலணு வாக்கவேவேண்டும் - கருத்தாக வதனைமுடிப்போடவேண்டும்-வீணுகச்செம்பொன்று செலவுசெய்யாமல்-வெள்ளிரூபாயாக்க விருப்பமுறவேண்டும்-தருவெள்ளிரூபாயைச் சவரன்களாக்கும் - தந்திரமுயன்றுபொருள் சேர்க்கவே வேண்டும் - எவ்வாறு பணந்தேடும் வகையென்றுகேட்கில்-எளிதான மார்க்கங்களெத்தனையோவுண்டு-பாவாடை ரவிக்கைகளைதைக்கத்தெரிந்தால் - பலபேர்களுந்தேடிவந்துபொருள்தருவார்-கம்பளிநூல்வேலை கற்றுத்தெளிந்தால் கழுத்துக்குப்பட்டைகள் ஜோடுபின்னிடலாம் - சித்திரவிசித்திரபுஷ்பங்கள்செய்தே - சீரானகொட்டைக்கு அணியாகத்தரலாம் சொகுசாய்த் தலைக்கணியதொப்பிகள்செய்யலாம்-சுந்தரமுடன்வேறு பலவேலைசெய்யலாம்-அலங்காரமொக்குகள் அவைபோடத்தெரிந்தால்-அனைவர்க்குங்கற்பித்து அதிலும்பணம்பெறலாம்-சொன்னவகையாற்பணஞ்சுளுவாகத் தேடி சுறுக்குப்பையிற்போட்டு சும்மாயிராமல் - வளர்பிறைதனைப்போல வளரவே நாளும்-வட்டிக்குமாறியதை வளர்க்கவேவேண்டும் - ஒன்றுபத்தாய்பத்து நூறாகும்வழியே-உள்ளத்தில்நாடியதைகொள்ளவேவேண்டும் - கைப்பொருளிருந்தால் கனக மிக்கவுண்டு-கம்மல் புலாக்குடன் கத்தரிப்பாவல் - ஜிமிக்கிகொப்புடன் சீரானமுருகு-சிங்காரஜடைபில்லை திகழ்மயிர்மாட்டி காப்புகொலுசுகள கல்லட்டிகையும்-கதிர்வீசுவங்கியும்கையின்மோதிரமும் - ஒட்டியாணத்துடன் ஒளிர்கால்கொலுசும்-உற்றவிறலில்பீலி காலாழிசுற்றும்-மல்லின்பாவாடை மத்தாப்புரவிக்கை

களும் - மதிப்பிலாபவளமுள்ளபட்டுப்புடவைகளும் இன்னமும் பலநகைகள் ஏற்றவாடைகளும்-இனிதாகக்கொண்டணிந்தெழிலாயிருந்தால் - பொருளுள்ள பெண்ணையேபுருஷர்நாடுவதால்-புகழானபிஏ எம்ஏ பட்டம்பொருந்தும்-நல்லமணவாளனை நலமாயடைந்து*நகமுஞ் சதையும்போல நட்பாகவாழ்ந்து-நாடு பொருள்கூடு உனக்கீடு எவர்தேடு ஏலேலோ.

## குடும்ப ஒழுக்கம்.

ஏலேலோ ஏலேலோ உத்தமியே ஏலேலோ ஏலேலோ, சீரான பெண்ணரசே சிறந்த ஒரு புருஷருக்கே, ஆராய்ந்து உன்னைப்பெற்றார் அழகாகமணம்பேசி, ஏலேலோ ஏலேலோ உத்தமியே ஏலேலோ.

## ஐ ரூ ர்.

பந்துஜனங்களுக்கெல்லாம்பரிவாகச்சொல்லி - பாங்காகக் கலியாணம் பந்தலலங்கரித்து-வாழைக்கமுகுகள் வரிசையாய்நாட்டி-வாத்தியங்கல்லென்று மாண்பாயொலிக்க - நலமுற்ற வேளையினற் புறஞ்சூழ்ந்து பொலிவுள்ளமாதர்கள் நலங்கிட்டுமுடிக்க - தக்கவுதகத்தாலே ஸ்நானஞ் செய்வித்து - சார்ந்தபரிமளப் பொடிகள் தயங்கமெய்ப்பூசி-சரிமலர்க் குழலுக்குத் தூபங்கள்காட்டி-சொர்ண பூஷணங்கள்பல துலங்க வலங்கரித்து-மாதர்கள் பலர்சூழ்ந்து மங்களம்பாட வேதியர்கள்பல்லாண்டு விளம்பிமகிழ்கூற அக்கினியருந்ததி இவர்சாக்ஷியாக - அருகாநின்று தத்தஞ் செய்தளிக்க-தாலிகட்டியகணவனேதெய்வமாக தவறுமலவன்சொல்லும் வழிநிற்கவேண்டும் - மாமியார் நாத்திகளை மகிழ்விக்க வேண்டும் - மாறுசொல்லாம

லவர் சொற்கேட்கவேண்டும் - கணவனுர் கோபிக்க வொன்றுஞ்சொல்லாதே-காட்டேறிபோலவன்முன் னேநில்லாதே-ஒன்றுக்குபலசொற்கள் பேசியெதிர்க் காதே - ஒட்டாரஞ்செய்துபாய்போட்டுபடுக்காதே ஆத்திரங்கொண்டு ஒரு அடியுன்னையடித்தால் - அடி யென்றுமடியிற் கைபிடித்திழுக்காதே-இல்லாதபொ ருள்களுக்கிச்சைவையாதே - எந்நேரமுஞ் செல்லைப் போலெரிக்காதே,- வீட்டுசெங்கதிகளை வெளியிற்சொ ல்லாதே - வெட்கங்கெடப்பிறர் நகைக்கவையாதே- பாழானகோபத்துக்கிடங்கொடாதே - பத்திரகாளி யைப்போலே தலைவிரிக்காதே - வரவுக்குமேலிட்ட செலவுசெய்யாதே-வாழ்நாளெல்லாந்துக்கப்படவை த்திடாதே - இதமானவார்த்தையே பேசிவரவேண் டும்-இஷ்டப்பதார்த்தங்கள் சமைத்துவைக்கவேண் டும்-கூன்குருடானுலும் குறைபேசிடாதே-குலங்கெ ட்டபோதிலும் குற்றம்வையாதே - அன்னியபுரு ஷர்மேலாசைவையாதே - அதனுலவமான மடக்க முடியாதே - காசுக்கழித்திட்ட கற்புகோடிபொன்- கணக்காகக்கொடுத்தாலும்மீளவராதே - அயல்வீட் டுக்கடிக்கடி போகநினையாதே-அலக்ஷியமாய்ப்பேச வுடலெடுக்காதே-மேனிமினுக்கி ஒளிவாய்நடவாதே வேறுபுருஷரிச்சைகொள்ளத்திரியாதே - இவ்வாறு நடந்திடிற் குடும்பவிஷயங்கள் எந்நாளுங்குறையாம லீடேறிநல்ல - புத்திரப்பேறுடன் போக பாக்கியங் கள்-பொற்பூஷணங்களும்புகழுடன்பெறுவாய்-தேர் ந்து துயர்தீர்ந்து அருள்கூர்ந்து மிகயோர்ந்து ஏலே லோ.

மாதர்கற்புப்பாடல் ஆனந்தக்களிப்பு.

கர்த்தாவேமுதல்தெய்வம்மானே-பின்பு
பத்தாவல்லாலுண்டோ பாக்கியந்தானே

புருஷன்வார்த்தைதட்டாதே-முட்டும்
எருதுபோல்நீசண்டைக்கிடுப்புக்கட்டாதே
தேகமுஞ்சீவனும்போலே-கொண்ட
மாகணவனுடன் வாழ்வதுமேலே
கணவனுன்மேற்பகைமூர்க்கம்-செய்யில்
குணமாகப்பேசிக் குலாவுதல்மார்க்கம்
கற்புநிலையேசிங்காரம்-அது
தப்பினேரழகு சவவலங்காரம்
அரைக்காசுக்கழித்திட்டகற்பு-நூறு
மரக்காற்பொன்கொடுத்தாலும் வருமோநீசெப்பு
அந்நியனழகானுலும்-கற்பின்
அரசனைநம்பிப் புருஷனைக்கைவிடாதே
சிற்றின்பந்தானரைநொடியே-வரும்
குற்றமும்பழிகளுங் கோடியோர் கோடியே.

என்ற விவேகிகளின் உபதேசங்களை ஒவ்வொரு ஸ்திரீயுங்கவனித்து நடந்து புருஷருடன் ஒருமைப் பட்டுசுகமாய்வாழ்ந்துகுழந்தைகளைப்பெற்று ஈமொய்க்காமலும் எறும்புகடியாமலும் காற்றுவீசாமலும் பனிபெய்யாமலும் மார்பிலும்தோளிலும்வயிற்றிலு மணைத்து முலையூட்டி மூக்குசிந்தி நாசியூதி செவியுருவிநீராட்டி விழிகளுக்கு அஞ்சனந்தீட்டி பலமணிகளும்பூட்டி கன்னங்கிள்ளி உச்சிமோந்து கண்ணோடுகண்ணும் வாயோடுவாயும் முகத்தோடு முகமும் வைத்துப் பொற்றொட்டிலிட்டுத் தாலாட்டல்.

ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ

சீரார்பசுங்கிளியே தெவிட்டாதசெந்தேனே
பேரார்க்குலக்கொழுந்தே பெருமானே கண்வளராய்

மாணிக்கக்கால்நாட்டிவஜ்ரவடம்பூட்டி [கண்வளரா
ஆணிப்பொன்தொட்டிலிட்டேன் அருமருந்தேன்

மானேமரகதமே மல்லிகையேசண்பகமே
தேனேபசுங்கிளியே செல்வமேகண்வளராய் ஆ

பெருஞானவாரிதியாம் பேருலகிலேயுதித்த
திருஞானசம்பந்தச் சீமானேகண்வளராய் ஆ

தப்பானபுன்சமணச் சார்பைக்கழித்துயர்ந்த
அப்பாதிருநாவுக் கரசேநீகண்வளராய் ஆ

வேதாவுங்காணு விமலனைப்பேதையிடந்
தூதாவனுப்புஞ சுந்தரனேகண்வளராய் ஆ

வேணிப்பான்கமல மெல்லடியேபோற்றிசெயும்
மாணிக்கவாசகப்பேர் மாதவனேகண்வளராய் ஆ

ஆதிமறைப்பொருளை யகிலமிசைவள்ளுவராய்
நீதிமுறையருளும் நின்மலனேகண்வளராய் ஆ

வெம்மாயைநீக்கி யொளியாகவந்துதித்த
நம்மாழ்வாரேயெங்கள் நற்றவமேகண்வளராய் ஆ

கருமமெல்லாம்போக்கும் கதியைத்தரவந்து
திருமழிசையாழ்வாரே செம்மலேகண்வளராய் ஆ

கரமாளச்செய்த கஜமளித்தோன்சீர்பாடும்
இராமாநுஜனே இலஞ்சியமேகண்வளராய் ஆ

அன்னநடைமெல்லியர்களாசையுடன்முத்தமிடும்
கன்னுகன்னதல்லிவெனும் நாயகியேகண்வளராய் ஆ

பொன்தொட்டிலில் நித்திரைசெய்து விழித்துக்கொண்டகுழந்தையைத் தாயாரெடுத்து பால்கொடுத்தல்.

ராரசுபங்கா சீக்ரமேசனுயென்னும் வர்னமெட்டு.

பல்லவி.

வாராயென்கண்ணு வந்தேன்பாலேயுண்ண
சீராகத்தின்ன சீக்கிரம்மன்ன வா

சரணங்கள்.

நித்திரைவிட்டெழுந்து நேரமாச்சுதுதின்று
தத்தித்தவழ்ந்து தனயனேநீநன்று வா

நெஞ்சுவுருமடா கெஞ்சியழைத்தேனடா
வஞ்சமேனடாநிற்கு வலுவிலழைத்தேனடா வா

குஞ்சுமணிச்சிலங்கு கொண்டுவந்தேனடா
பஞ்சனையுஞ்சல்விட் டிங்கனம்நீவாடா வா

தேவானுகூலா தேவகிதேவிபாலா
வேணுகோபாலா வேண்டினேன்தயாளா வா

தாய்மார்கள் குழந்தைகளை நற்பழக்கத்தில்
கொண்டுவரும் முறைமைகள்

சாய்ந்தாடல்.

சாய்ந்தாடம்மாசாய்ந்தாடு தாமரைப்பூவேசாய்ந்தாடு, குத்துவிளக்கே சாய்ந்தாடு கோயிற்புறாவேசாய்ந்தாடு, பச்சைக்கிளியே சாய்ந்தாடு பவளக்கொடியேசாய்ந்தாடு, சோலைக்கிளியே சாய்ந்தாடு சுந்தரமயிலேசாய்ந்தாடு, கண்ணேமணியே சாய்ந்தாடு கற்பகக்கொடியே சாய்ந்தாடு, கட்டிக்கரும்பே சாய்ந்தாடு கனியேபாலே சாய்ந்தாடு.

கைவீசுதல்.

கைவீசம்மாகைவீசு கடைக்குப்போகலாம் கைவீசு, மிட்டாய்வாங்கலாம் கைவீசு மெதுவாய்த்தின்னலாம்கைவீசு, அப்பம்வாங்கலாம்கைவீசு அமர்ந்து தின்னலாம் கைவீசு, பூந்திவாங்கலாம்கைவீசு, பொருந்தியுண்ணலாம் கைவீசு, பழங்கள்வாங்கலாம் கைவீசு, பரிந்துபுசிக்கலாம் கைவீசு, சொக்காய்வாங்கலாம் கைவீசு, சொகுசாய் போடலாம் கைவீசு, கோயிலுக்குப்போகலாம் கைவீசு கும்பிட்டுவரலாம் கைவீசு, சும்மாய்ப்பார்க்கலாம் கைவீசு

திரும்பிவரலாம் கைவீசு, கம்மல்வாங்கலாம்கைவீசு
காதில் போடலாம் கைவீசு.

## தலைப்பிடித் தாட்டல்.

சின்னி தலைநொந்ததே சின்னக்கா தலைநொந்ததே
பாபா தலைநொந்ததே பாபக்கா தலைநொந்ததே.

## குழந்தைக்கு பாற்சாதம் ஊட்டல்.

அம்மா அம்மா பூச்சி சின்னி தேச்சி
இன்னங்கொஞ்சம்சோச்சிபின்னுங்கொஞ்சம்பாச்சி
எல்லாஞ் செரித்துப்போச்சு இன்னம் பெருமூச்
சில்லுண்டதாச்சா நீயேபெரும்பாச்சா. [சா

இவ்வாறு விளையாடச்சென்ற குழந்தையைக் கா
ணேமென்று தாயார் வருத்தமுற்றுத்தேடுதல்.

## குழந்தையைத்தேடும் பாடல்.

என்குழந்தைபோனவிட மெனக்குத்தெரியாதே
எந்தன் துரைக்கோபி என்னசொல்லுவாரோ
நல்லதொருதொட்டில்கட்டி நான்வளர்த்தகுழந்தை
நான்வளர்த்தகுழந்தையை நஷ்டமிட்டவளாரோ
தங்கச்சிலங்கைகட்டி தரையில்விட்டமகவு
தரையில்விட்டமகவுதனை சாத்திகொண்டவளாரோ
வெள்ளியினுல்சலங்கைகட்டி வெளியில்விட்டமகவு
வெளியில்விட்டமகவுதனை மடக்கிவைத்தவளாரோ
கூவுங்குயில்தொனியுடனே கொஞ்சிவரும்பாலன்
கொஞ்சிவரும்பாலன்தனை கூவியழைத்தவளாரோ
தங்கதுரையெந்தன்சாமி தானென்சொல்லுவாரோ
மாயமலைபழனிவடி வேலர்கிருபைசெய்வாய்.

## சொல்பழக்கங் கற்பிக்கும்பாடல்.

கும்பகோணமேகோணம் குறவன்நட்டதேசோளம்
ஸ்ரீராமர்விட்டதேபாணம்அதுஎங்கேபோனதோகாணும்

உள்ளங்கையில் நெல்லுகுத்திக்காட்டும் பாடல்.

அகத்திக்கீரை பிண்ணாக்கு அதிலே கொஞ்சம் நெய்வாறு, பிஞ்சு கத்திரிக்காய் பொரியல் பின்னுங் கொஞ்சம் நெய்வாறு.

கையோடு கைதட்டி

கும்மியடிக்கச் சொல்லும் பாடல்.

தந்தானகும்மி தானான கும்மி
அன்ன தானத்துக்கு சின்ன கும்மி

பராக்குக்காட்டல்.

காக்கா-கண்ணுக்கு மை கொண்டுவா
குருவி-கொண்டைக்குப் பூ கொண்டுவா
கொக்கு-குழந்தைக்குத் தேன்கொண்டுவா
கிளியே-கிண்ணத்தில் பால்கொண்டுவா.

அப்பா முன்னேவாருங்கள்
அழாதேயென்றுசொல்லுங்கள்

நிலாவை அழைத்துக் காட்டல்.

நிலாநிலா வாவா நில்லாமலோடிவா, மலைமேலே ஏறிவா மல்லிகைப்பூக் கொண்டுவா, நடுவீட்டில்வையே நல்லதுதிசெய்யே, வெள்ளிக்கிண்ணத்தில் பால் சோறு அள்ளியெடுத்து அப்பன்வாயில், கொஞ்சிக் கொஞ்சியூட்டு குழந்தைக்குச் சிரிப்புகாட்டு.

நிலாவோடு வார்த்தையாடிக் காண்பித்தல்.

நிலாநிலா எங்கெங்கேபோறாய் மலையாங்குளத்துக்கு மண்ணெடுக்கப்போறேன், மண்ணென்னத்துக்கு சொப்புபண்ண, சொப்பென்னத்துக்கு மாடுவாங்க, மாடென்னத்துக்கு சாணம்போட, சாணமென்னத்துக்கு வீடுமெழுக, வீடென்னத்துக்கு பிள்ளை பெற பிள்ளையென்னத்துக்கு ஓலைப்பாயிலே ஓடிவிளையாட, ஈச்சம்பாயிலேயிருந்துவிளையாட, பிரப்பம்

பாயிலே புரண்டுவிளையாட, கோரைப்பாயிலே குதித்துவிளையாட, தாழம்பாயிலேதவழ்ந்துவிளையாட.

வெண்ணிலாவை வினவல்.

வித்திலாமலேவிளைந்த வெண்ணிலாவே-நீதான்
விளைந்தவண்ணமேது சொல்வாய்வெண்ணிலாவே
அந்தரத்திலாடுகின்றார் வெண்ணிலாவே-அவர்
ஆடும்வகையெப்படியோ வெண்ணிலாவே
ஞானமாய்விளங்கும் வெண்ணிலாவே-என்னை
நானறியச்சொல்லுகண்டாய் வெண்ணிலாவே
அந்தரங்கசேவைசெய்ய வெண்ணிலாவே-எங்கள்
ஐவர்வருவாரோ சொல்வாய் வெண்ணிலாவே
ஆருமறியாமலிங்கே வெண்ணிலாவே-அரு
ளாளர்வருவாரோசொல்வாய் வெண்ணிலாவே.

அணையாடையிலிட்டுத் தாலாட்டுதல்.

ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ.

முத்தே பவளமே முக்கனியே சர்க்கரையே
கொத்துமருக்கொழுந்தே கோமளமேகண்வளராய்
ஆயர்குலத்தில் அவதரித்தமாமணியே
மாயனேகண்ணா மகிபனே கண்வளராய்

தாயார் பால்கொடுத்தபின் குழந்தை தவழ்ந்து விளையாடிக்கொண்டிருக்கையில் வேறு சிலமாதர்கள் அக்குழந்தையையெடுத்து அதுசெய்யும் சேஷ்டைகளைத் தாயிடங்கூறல்.

கீர்த்தனை.

கிருஷ்ணன்செய்திகேளும்-மாய
கிருஷ்ணன்செய்திகேளும்

அரிதுதவழ்ந்துவந்து-எங்களை
அணைத்துக்கொள்கிறானே கிருஷ்ணன்

உரலடுக்கிலேறி-தயிர்பால்
உரியையுருட்டுகிறானே கிருஷ்ணன்

பின்னேவந்து மெதுவாய்-பெண்கள்
பின்னல்பற்றி யிழுப்பான் கிருஷ்ணன்
திரும்பிப்பார்த்துக்கேட்டால்-யாரோ
தெரியாதென்று சொல்வான் கிருஷ்ணன்
முகத்துக்கெதிரேவந்து-விரைவில்
முத்தமிட்டு மறைவான் கிருஷ்ணன்
தேடிப்பார்க்கும்போது-எங்கும்
தெரிந்திடாமலொளிப்பான் கிருஷ்ணன்
எங்கள் புருஷர்கண்டால் நாங்கள்
என்னசெய்வமம்மா கிருஷ்ணன்
குழந்தையென்றுபார்த்தோம் அவன்செய்
கொடுமைமெத்த சகியோம் கிருஷ்ணன்
பொறுத்தவரைக்கும்போதும் உன்மகனுக்குப்
புத்திசொல்லுமம்மா கிருஷ்ணன்

சகாணராகம்-ரூபகதாளம்.

குழந்தைக்குத் தாயைக்கொண்டு
புத்திசொல்லச்சொல்லுதல்.

பல். புத்திசொல்லடி யசோதே உன்மகனுக்கு
புத்திசொல்லடி யசோதே

புத்திசொல்லடி யசோதே நித்தமுங்கள் கிருஷ்ணனுக்கு, அத்தைமா நாத்தியென்றும் சற்று மரியாதையில்லை.

கட்டியென்னை யணைந்தானே-அணைந்ததற்கு
தொட்டுதாலி கட்டினனே
கட்டவும் மதித்தானே-இப்படிப்பட்ட
துஷ்டபிள்ளை பெற்றதேனே
துஷ்டதன்மை பிறந்தாலும்
மட்டுமரி யாதையில்லை
கட்டிலின்மேல் உரியில்-வெண்ணெய்
சட்டிவைக்க ஆசையில்லை

சித்திரமெத்தை மீதிலிருந்து-அசைந்தசைந்து
நித்திரைசெய்தது தான்கண்டான்
மெத்தெனவே வோடிவந்தான்-கையினல்வாயை
பொத்தியா யமைத்துக்கொண்டான்

மட்டுமீறியென்ன செய்வோம்
வெட்கத்தையாரோடே சொல்வோம்
இத்தனைபேர் பெண்களிலே
பத்தினி யொருத்தியில்லை புத்தி

பண்டுபழி யெங்கள்மீதில்-இராமகிருஷ்ணனை
தண்டனைசெய்ய வொண்ணுதா
கண்டுங்காணுதே யிருந்தால்-அவன்மனம்
சண்டையேனென் றெண்ணுதா

வண்டுபோல் இருந்தசுகம்
கண்டவ னிவனல்லவோ
பெண்டென்று சொல்லுவதைக்
கொண்டவ னறிந்ததில்லை புத்தி

தாயார் குழந்தைக்குப் புத்திகூறல்.

சாமாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஏண்டா வுனக்கிந்த துஷ்டத்தனம் கிருஷ்ணு
வேண்டாமிக்காரியம் என்வார்த்தையைக்கேளடா

சரணங்கள்.

உரியில்தயிர்பாலைநீ உருட்டிவிட்டோடிரையா
பிரியமுடனிருந்தென் வார்த்தைகேளடா ஏ

சட்டிவெண்ணையெல்லாம் சலிப்பிட்டுதின்றயா
பட்டிநாரிகள்கண்டால் பதைத்தடியாரோடா ஏ

வீடுவீடாய்நுழைந்து வீட்டுக்கதவடைத்து
தாடிமுத்தந்தாவென்று தாவிக்கையைபிடித்தாயா ஏ

இக்குவலயந்தனில் என்பேரையழிக்கவந்தாய்
முகுந்தராமாநுஜ|தாசனகையாரோடா ஏ

## குழந்தை ஸ்திரீகளின்மீது தாயாரிடம் முறைகூறல்.

பூரிகல்யாணி-ராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பொல்லாத கோபிகளம்மா அவர்கள்
இல்லாதவார்த்தைகளைச் சொல்லுராரம்மா பொ

சரணங்கள்.

இருட்டிலே வெண்ணையெட்டுமோ அங்கே
இருக்குமுரியில்வெண்ணை எனக்கெட்டுமோ
திருட்டுப்பே யென்னைத்திட்டுமோ இந்த
பிரட்டகர்சொல்லுகிறது சரிகட்டுமோ பொ

வெண்ணையெங்கே கிடையாதோ தங்கள்
கிண்ணியிலேநீதந்த வெண்ணைபோதாதோ
அண்ணனுக்குத் தெரியாதோ இந்த
வீண்ணக்காரர்கள் எண்ணலாகாதோ பொ

அம்மாநான் சின்னஞ்சிறியேன் இந்த
பொம்மையானபெண்களுடன் ஒன்றுமறியேன்
செம்மையா யெங்குந்திரியேன் வீணைகச்
சும்மாநானொரு காரியம்புரியேன் பொ

பாலனென்ன ஏசுறாரம்மா வரதனே
பாலதாசனென்று கைவீசுறாரம்மா
மேலுமின்னும் கூசுராரம்மா இந்த
வீணவார்த்தைகளைப் பேசுறாரம்மா பொ

இவ்விதமாகச்சொல்லிய ஸ்ரீபாலகிருஷ்ணமூர்த்தியைநோக்கி தீர்க்கதெண்டனிட்டுப் பெண்கள் சொல்லும்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி துதி.

கடிகமழுந்துளபமணி மார்பனேயென்
கண்மணியேசெங்கமலை கணவாமூன்று
படியுமோரடியாக வளர்ந்தபாதா
பக்தவச்சலமுகுந்தா பட்சிராஜா

கொடியுடைகாரம்புயனே யாயர்பாடிக்
கோபிகளுக்கின்பருளுங் குருந்தேமுன்னு
மடியவரேம்புத்ரமித்ர களத்திராதி
யருஞ்செல்வம்பெற்றுளநீ வருள்செய்வாயே.

நாமாவளி.

அம்பலத்தரசே யருமருந்தே ஆனந்தத்தேனேய ருள்விருந்தே, பொதுநடத்தரசே புண்ணியனே புல வரெலாம்புகழ் கண்ணியனே, மலைதருமகளே மட மயிலே மதிமுகவமுதேயிளங்குயிலே, ஆனந்தக்கொ டியேயிளம்பிடியே யற்புதத்தேனே மலைமானே சிவ சிவசிவசிவ சின்மயதேஜா சிவசுந்தரகுஞ்சித நடரா ஜா, படனவிவேக பரம்பரவேதா நடனசபேசசிதம் பரநாதா, அரிபிரமாதிதேடியநாதா அரகரசிவசிவவா டியபாதா, அந்தரவங்கணவம்பரபோகா இம்பலவம் பிரவம்பிகைபாதா, அம்பரவிப்பரசிதம்பரநாதா அஞ் சிதரஞ்சிதகுஞ்சிதபாதா, தந்திரமந்திரயந்திரபாதா சங்கரசங்கர சங்கரநாதா, கனகசிதம்பர சங்கரபுர ஹர அனகபரம்பர சங்கரஹரஹர, சங்கலகலாண்ட சராசரக்காரண சகுணசிவாண்டபராபரிபூரண, இக் கரைகடந்திடிலக்கரையே இருப்பது சிதம்பரச் சர்க் கரையே, என்னுயிருடம்பொடு சித்தமுதே இனிப் பதுநடராஜபுத்தமுதே, ஐயர்திருச்சபை நாடகமே ஆடுதலானந்தநாடகமே, உத்தரஞான சிதம்பரமே சித்தியெலாந்தருமம்பரமே அம்பலவாசிவமாதேவா வம்பலவாவிங்கு வாவாவா, நடமிடுமம்பல நன்ம ணியே புடமிடுசெம்பொன் பொன்மணியே, உவட் டாது சித்திக்குமுள்ளமுதே தெவிட்டாது தித்திக் குந்தெள்ளமுதே, நடராஜவள்ளலைநாடுதலேநந்தொ

ழிலாம் விளையாடுதலே, அருட்பொதுநடமிடு தாண்டவனே யருட்பெருஞ்ஜோதி யென்றாண்டவனே, நடராஜமாணிக்க மென்றதுவே நண்ணுதலாணிப் பொன்மன்றதுவே, நடராஜபலமது நம்பலமே நடமாடுவதுதிரு வம்பலமே.

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே, காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே, வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே, மதியார்க்கும்மதிப்பவர்க்கு மதிகொடுக்கும் மதியே, நல்லோர்க்கும் பொல்லார்க்கும் நடுநின்றநடுவே, நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே, எல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே, என்னரசேயான்புகலு மிசையுமணிந்தருளே.

தனிச்சிறியேன் சிறிதிங்கே வருந்தியபோ ததனைத்தன்வருத்தமெனக்கொண்டுதரியாதக்கணத்தே பணிப்புருவமவ்வருத்தமெலாம்தவிர்த்தருளிமகனே பயமுனக்கென்றென்னைப் பரிந்தணைத்த குருவே, இனிப்புருவ நன்மொழிபுகன்றேன் முடிமிசைமலர்த்தாள், இணையமர்த்தியெனையாண்ட வென்னுயிர் நற்றுணையே, கனிந்தநறுங் கனியேயென் கண்ணே சிற்சபையிற், கலந்தநடத்தரசே கருத்துமணிந்தருளே.

இருளிரவி லொருமூலைத் திண்ணையில் நான்பசித்தே, இளைப்புடனே படுத்திருக்க வெனைத்தேடிவந்தே, பொருளுணவுகொடுத்துண்ணச்செய்வித்தேபசியை, போக்கியருள்புரிந்தவென்றன் புண்ணியநற்றுணையே, வருளிரவுநீக்கியெல்லாவாழ்வுமெனக்கருளி, மணிமேடை நடுவிருக்கவைத்தவொருமணியே, யருளுணவு மளித்தென்னை யாட்கொண்டசிவமே, அம்பலத்தென்னரசே யென்னலங்கணிந்தருளே.

நான்பசித்தபோதெல்லாந்தான்பசித்ததாகிநல்லுணவு கொடுத்தென்னைச் செல்வமுற வளர்த்தே யூன்பசித்த வினையொன்றுந் தோற்றாத வகையே யொள்ளிதெள் ளமுதெனக் கிங்குவந்தளித்த ஒளியே, வான்பதிக்கு நெடுமாற்கு நான்முகற்கும்ரிதாம் வாழ்வெனக்கே யாகியுற வரமளித்தபதியே, தேன் பருத்த மலர்மனமே திருப்பொதுவில்ஞானத் திருநடஞ்செய் யரசேயென் சிறுமொழியேற்றருளே.

## விநோத விடிகதைகள்.

முன்னொருஊரின்பேராம் முதலெழுத்தில்லாவிட்டால், நன்னகர்மன்னர்பேராம் நடுவெழுத்தில்லாவிட்டால், கன்னமாம்விலங்கின்பேராம் கடையெழுத்தில்லாவிட்டால், உன்னிய தேனின்பேராம் உரைப்பீரிவ்வூரின்பேரை — மதுரை

கிண்ணியைப்போல்பூபூர்க்கும் — பூசினிப்பூ

பெரிய கடார்த்தங்காய்போல்காய்காய்க்கும் — [பூசினிக்காய்

கருப்புச்சட்டைக்காரன் காவலுக்குகெட்டிக்காரன் — [பூட்டு

ஜாடிமேலே குரங்கு — முந்திரிக்கொட்டை

நோய்நொடியில்லாமல் முக்கித் திரிகிறானொருவன் — [பன்றி

கோயில்குளமில்லாமல் கொட்டித்திரிகிறானொருவன் — [குயவன்

ஏறாதமரத்திலே எண்ணாயிரங்காய் — கேழ்வரகு

தச்சனிழைக்காதமர மென்னமரம் — துடைப்பம்

கிணற்றைச்சுற்றிப் புல் — கண்ரெப்பை

சின்னவீட்டுநிறையச் சிறு — வாய்நிறையப்பல்

ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டி — ஆகாயம்

ஊருக்கெல்லாம் ஒரேகல் — உப்பு

சின்னவெங்காரம் வீடெல்லாஞ்சிங்காரம் — விளக்கு

ஒருபொறிபறக்க ஊரெல்லாம்பொறி விளக்கு
கொக்குநிற்கநிற்க குளம்வற்றவற்ற விளக்கு
சொம்புநிறையக் கெம்பு மாதுளம்பழம்
அள்ளுவான் கிள்ளமாட்டான் தண்ணீர்
எங்கள்மாட்டுக்கு மூன்றுகொம்பு குத்தால் பாயும்
[உவாமுள்ளு
ஒருநெல்குத்தி வீடெல்லாம் உமியாச்சுது விளக்கு
இரண்டுவீட்டுக்கு ஒருதூலம் மூக்கு
ஒருபுட்டியில் இரண்டுதைலம் கோழிமுட்டை
முள்ளில்லாதமீன் என்னமீன் முட்டை
சுட்டவிட்டகுருவி சுப்பலேறுது வடை
குத்துக்குருவிக்கு மூழம்வால் அகப்பை
உரித்துவிட்டகுருவி ஊருக்குப்போகிறது புளி
காட்டிலே துளிரத்தம் குண்டுமணி

காலேயிரண்டுண்டு நடக்கறியாளிரு கண்ணுமுண்டு, மேலேவிழிகள் நோக்கறியாளந்தமெல்லி நல்லாள், பாலேகுடிக்க வகையறியாள் கொஞ்சம் பாக்குத்தின்பாள் ஆலோசனைசெய்து சொன்னவர்க்கே செம்பொன் ஆயிரமே. பாக்குவெட்டி

மண்பிசைந்து வேலைசெய்வான் குயவனல்ல, வங்காளம்போய்வருவான் செட்டியல்ல, கண்ணுண்டு மூக்கில்லை தேங்காயல்ல, காலுண்டு தலையில்லை சுபந்தமல்ல, இன்னுண்டு சிலபேர்க்கு இச்சையாவான் ஈசனுக்கும் மாயனுக்கும் பெரியோன்தானே. நண்டு

கூட்டிலேயிருக்குமது கிளியுமல்ல கொழுந்தோடியிருக்குமது இரைதின்னாது, காட்டிலே விட்டுவிட்டால் பறந்தேபோகும் கனத்தமன்னர் வாசலிலே காவலாகும் ஈட்டிகத்திபிடித்தவர்க்கு எதிரேநிற்கும் இக்கதையைச் சொல்லுகிறேன் பூவையற்கு நாட்டினி லிக்கதையை யுரைத்தாரானால் நாமவரைக்குருவென்று வணங்கலாமே. அம்பு

ஈரேழுபதினாலு லோகங்களதிலே இருபுரமூந்தச் சரமைத்திட்டதுமதிலே, மாமேரு புளியமாவிதை யதிலே வந்தாடும் பெண்களுக்கு மாலுண்டமதிலே
[பள்ளாங்குழி

பொன்னும் வெள்ளியும் பூண்டு மினுக்குவள்போ தவே எண்ணெய்வார்த்துமுழுகுவள் வர்னமாயிரம் பூவைமுடிப்பவள் வழிநடக்கும் அலங்காரிகாண், சொன்னகாசைப் பணத்தைப் பரிப்பவள் சொல்ல வென்றாலும் தாசியல்லகாண், மன்னவா யிந்தநற் கதை தன்னையே மனமகிழ்ந்து வுரைத்து நீபோவையே.
செருப்பு

ஐவருடனே பிறந்தான், தருமனல்ல அதிலொரு வன சாட்சிசொல்வான்மனிதனல்ல தன்சுவையைத் தான் சுவைப்பான் ஏணியல்ல தரணியெங்கும் புல் சுமப்பான் சண்டாளனல்ல, கன்னியரை மணம்புரிவான் கடைதம்பி கண்டுசொல்வா னவளே தங்கச்சியாமே.
ஐந்துவிரல்கள்

அந்தரத்தில் பறந்திடும் பறந்தேயல்ல அழகான வாலுண்டு அனுமாரல்ல, விந்தையுடன் கட்டுண்ணுங்கட்டுமல்ல வேந்தரது திருநாமம் அவர்க்கே யுண்டு.
காற்றாடி

பேச்சில்லை பெருமூச்சுவிடுவான் உணவில்லை ஊரைச்சுமப்பான் உயிரில்லைஓடித்திரிவான் பானமில்லை தண்ணீர்குடிப்பான், கண்டந்துண்டமாய்க்கரியைத் தின்பான் கண்களில்லை காதம்நடப்பான், குரலில்லை கூச்சலிடுவான் மழையில்நனைவான், வெய்யலிற் காய்வான்நோயுமடைவான் மருந்தும்புசிப்பான் எப்படி சொன்னாலும் அப்படியே கேட்பான். புகைவண்டி

பிடிபிடி சுப்பல்பொறுக்கி அரண்மனைவாசல் கட்டிப் பார்க்கவந்த ராஜாக்களெல்லாம் பல்லையிளித்தார்கள்.
மீன்

கனதனத்தாளைக் கடையிலேகண்டேன் கண்டவுடனே கொண்டேன் கொண்டவுடனே அடித்தேன் அடித்தவுடனே சிறித்தாள் சிறித்தவுடனே கடித்தேன். தேங்காய்

மதுரமான் ஏரிலே மான்வந்து நிற்கிறது கட்டடாபிடியடா கள்ளக்கயிறுபோடடா இந்தவிடியை விடிக்கிறவர்க்கு நூறுவெற்றிலை நூறுபாக்கு சுண்டு விரல்களால் குற்றுச்சுண்ணும்பு. ஸ்டீமர்

முள்ளு முள்ளுக்குள்ளே முந்திரித் தோப்புக்குள்ளே வைக்கப்போருக்குள்ளே கண்டெடுத்தேன் வயிரமணி. பலாப்பழம்

பச்சைபச்சென்றிருக்கும் பாவக்காயுமல்ல பக்கத்தில் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல உள்ளேவெளுத்திருக்கும் தேங்காயுமல்ல, உருக்கினால் நெய்யொழுகும் வெண்ணெயுமல்ல. முத்துக்கொட்டை

சந்தனம் புனுகுபோல் விதித்தகதை சொல்லவா தகப்பனோடிவந்து அடித்தகதைசொல்லவா செங்காடுதீப்பட்டுவெந்தகதைசொல்லவா தேசமெங்கும் ஒருபுறமாய்மாண்டகதைசொல்லவா. சட்டிபானை

இவ்வளவுண்டு சிற்றுண்டி வயிற்றைப்பிதுக்கினு செத்தாண்டி. நெல்லு

சின்னசிறுக்கியும் சின்னபையனும் சிறுத்துக்கட்டினதாலி சிக்கில்லாமல் அவிழ்ப்பவர்களுக்கு சென்னப்பட்டணம் இனம். தூக்கணங்குருவிகூடு

ஜன்னல்பின்னல்கயிறு ஜாதிலிங்கக்கயிறு எண்ணெபடாதகயிறு என்னகயிறு. பாம்பு

அருணகிரி திருணகிரிமேடை அறுநூற்றங் காதவழி கற்பூரவாடை இதைவிடித்தவர்களுக்குப் பூவினல்மாலை. தவனமரி

வட்ட வட்ட சிங்கன்ன வாலில்லாத சிங்கன்ன என்னைவந்து எழுப்பண்ண. மூட்டுப்பூச்சி

இராஜாதி ராஜபடியில்லை அவள் பூசுகிற கெந்த பொடியில்லை அவள்வயிற்றிலே ஆறுமாதம் பிள்ளை.
[தாழம்பூ

அஞ்சிலபிஞ்சிலஹாஹா அரியாதசுன்னனூளஉள சிறியவர்களே இப்படியிருக்கிறீர்களே எங்கள்பெரியவர்கள் எப்படியிருப்பார்கள். நெற்றிலிக்கண்டை

பத்துவிரல் பந்தாட ஐந்துவிரல் அமர்ந்திருக்க சூரியனுடன் சூதாட எமனுடன்வாதாட. வரட்டி

காயும்கோணறகாய் கொள்ளடாமைத்துனா கதையும் விடுவித்தேன் சொல்லடா மைத்துனா.
[கொள்ளுக்காய்

பந்துபந்தடா புளியம்பந்தடா நின்றுதாக்கடா உயிரைப்போக்கடா. துப்பாக்கி

போவான் வருவான் திம்மப்பன் ஒருகாலில் நிற்பான் திம்மப்பன். கதவு

ஆயாள்வீட்டுத் தோட்டத்திலே மஞ்சள்குருவி உஞ்சலாடுது. எலுமிச்சம்பழம்

மொட்டைமாடு உட்கார்ந்திருக்குது மூக்காங்கயிறு மேய்ந்துவருகிறது. பூசினிக்காய்

ஆயாள்வீட்டுத் தோட்டத்திலே பச்சைப்பாம்பு தொங்குது. புடலங்காய்

வட்டமதிபோலிருக்கும்வன்னிகொடிதாவும்கொட்டுவார்கைநின்று கூத்தாடும்சுட்டால் அர்கராவென்று என்னுமே அம்பலசோமாசி ஒருநாள் விட்டநீ துரை. வரட்டி

கொங்கையென்னும்பால்வடிய பூமுடிப்பாள் கூறிவருமாதகக் காவலிருப்பாள் அங்கமெல்லாம் மினுமினுக்கியெட்டிப்பார்ப்பாள் அவள்பேரிலெல்லாரும் ஆசைகொள்வார் செங்கையினல் கொங்கைதனை பிசையச் சொல்வாள் தெருவிலேநின்று விலைகூறுவாளே. கம்பங்கதிர்

பட்டைபட்டைநீக்கிபதினறுபட்டைநீக்கிமுத்து பட்டைநீக்கிமுன்னேவார்ராள்சீமாட்டி வாழைப்பூ

பந்தக்காலுநாலு பவழப்பல்லுபத்து வெள்ளித் தடி இரண்டு வெண்சாமரம் ஒன்று பசு

மந்திரமெல்லாம் ஒருமுட்டைக்குள்ளே மானமெல்லாம்ஒருகொட்டைக்குள்ளே பருத்திக்கொட்டை

எங்கள்தம்பி பந்தடிப்பான் பயரடிபபான் நூறு பேரை நறுங்கடிப்பான். ஈர்குளி

அடிமத்தளம் இலைபர்வதம் கொலைசிறுசு காய்து வறு பழம் தித்திப்பு. வாழைமரம்

மூக்குத்திப்போலபூபூர்க்கும் அப்படாஎன்றுகாய் காய்க்கும். நெரிஞ்சிப்பூ, நெரிஞ்சிமுள்

ஆயிரம்பேர் தச்சர்கூடி அழகானமண்டபங்கட்டி ஒருவன்கண்பட்டு உடைந்ததாம் மண்டபம்.
[தேன்கூடு

பச்சபச்சப் பல்லக்கு பார்ப்பாரப் பல்லக்கு இரும்பாலடித்தாலும் திரும்பாதபல்லக்கு. பிணம்

ஒருமரம் மரத்துக்கு பன்னிரண்டுகிளை கிளைக்கு முப்பது இலை. வருஷம் மாசம் நாள்கள்

ஆழக்குழிவெட்டி அதிலே ஒருமுட்டையிட்டு அண்ணாந்துபார்த்தால் தொண்ணூறுமுட்டை.
[பனைமரம்

வண்ணான் வெளுக்காத வெள்ளை மழைபெய்யாத தண்ணீர் குயவன்பண்ணாத பாண்டம். தேங்காய்

சிறுகடலும்பெருகடலும் பொங்கிவர சிறுமுத்துகளெல்லாம குதித்துவிழ மட்டந்தேங்காய்மலர்ந்துவர சங்கிலிபோட்டு இழுத்துவர. சோறுவடிதல்

வருகிறதும் போகிறதும் எண்ணலே வந்து கிடக்கிறதுமேதாலே சாவப்போகிறது உன்னலே செத்துக்கிடக்கிறதும எண்ணலே. மீன்

விநோத விடிகதைகள் முற்றிற்று.

## மங்களம்.

சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

மங்களம் ஜெயமங்களம் ஈஸ்வரனுக்கு
மங்களம் ஜெயமங்களம்.

அநுபல்லவி.

அங்கனுலகெங்குநிறை துங்கமதேவனுக்கு
மங்களமாந்திருவருள் வழங்குமகானுபாவனுக்கு

சரணங்கள்.

எல்லாச்சகங்களையு மீயபற்றவல்லானுக்கு
எவர்களுமேத்துமறை யியம்புசொல்லானுக்கு
கல்லார்பிழைபொறுக்குங் கருணைநல்லானுக்கு
காக்ஷிக்கினியவுருக கவினுந்தொல்லானுக்கு ம

மாதவரமரர்தொழும் வரிசைப்பெற்றுளனுக்கு
வளருங்கேயூரங்கள் வளைத்திண்டோளனுக்கு
சீதளமதிமுகத்துச் சிவைமணவாளனுக்கு
தேவாதிதேவனுக்கு திவ்யகுணாளனுக்கு ம

சொல்லும்பஞ்சகீர்த்தியும் செய்யும்விநோதனுக்கு
திகழுமடியோங்கட்குத் தெளிவித்தபோதனுக்கு
வல்லையனுக்கிரங்கும் வலமிகுநாதனுக்கு
மாணிக்கந்தனக்கருண் மனவாக்கதீதனுக்கு ம

வாழ்த்து.

வேதம்வாழி விமலனும்வாழியிங்
கோதுமான்மாக்கள் வாழியுவந்தமெய்க்
காதலன்பர்கள் வாழிகவினிநூல்
ஓதுபெண்களும் வாழியுலகினே.

பாலிகாபூஷணம் முற்றிற்று.

183585

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1929.